30

# இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்

யூலிய சீசர் உரோமாபுரிக்கு அரசன்; மகா பராக்கிரமசாலி; கருமங்களை எண்ணியே துணிவான்; துணிந்தபிறகு, துருவ நட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றுந் தான் அசையான்; உயிரிழக்க நேர்ந்தாலும் 'அச்சம்' என்றொரு பண்டம் அவனுக்குத் தெரியாது.

"அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்
தாடவனுக் கொருமரணம் அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சினரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகைசெய்பவன் யான்"

வீரன் ஒரு தரம் இறக்கிறான்; பயங்காளி நூறுமுறை சாகிறான்; என்று சொல்லிச் சீசர் சிரிப்பான்.

★ ★ ★ ★

புரூட்டஸ் சீசரின் உற்ற நண்பன்; பெரிய நீதிமான்; நல்லவன்; பரோபகாரி; அவனிடத்திலே ஒரு சிறு குறை; எளிதில் ஏமாந்து போகக்கூடியவன்.

கஷியஸ் பொல்லாத சகுனி.

கஷியஸும் அவன் கூட்டத்தாரும் புரூட்டஸை ஏமாற்றுகின்றார்கள். சீசரைக் கொல்வது புண்ணியம் என்று போதிக்கப்படுகின்றது. புரூட்டஸ் அந்தப் போதனையை அப்படியே நம்புகிறான்; ஒரு 'கோட்சே' யாக மாறுகிறான்.

★ ★ ★ ★

பங்குனி மாசத்திலே பட்டப்பகலிலே சீசரின் அத்தாணி மண்டபத்திலே, கஷியஸ், அவனைச் சேர்ந்த சர்ப்பங்கள், நல்ல மனிதனான புரூட்டஸ் குழுமி இருக்கிறார்கள்.

★ ★ ★ ★

சீசர், எதிர்ந்த தடைகளையெல்லாம் உதறித் தள்ளிக்கொண்டு, அந்தப்புரத்திலிருந்து, அத்தாணி மண்டபத்தை நோக்கி,

"மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தான்"

புரூட்டஸ்,

"பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தான்."

புரூட்டஸ்ஸின் கத்தி சீசரின் இருதயத்தைப் பிளந்தது, சீசரின் ஆத்மா, " புரூட்டஸ் நீயுமா" என்று சொல்லிக் கொண்டே வானத்தைக் கிழித்தது.; வெறுஞ்சரீரம்.

"விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்செவே செருமுகத் தமர்செய்யுந் திறனிலா
வஞ்சர்தீவினையினால் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றாதரோ."

என்றவாறே, நெஞ்சங் கொதித்துக் கொண்டே, நிலத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்தது.

★ ★ ★ ★

மாக் அன்ரனி மகா விவேகி; பெரிய வாசாலகன்; சூழ்ச்சிக்காரன்; அகழான்.

அன்ரனி புரூட்டஸ்ஸைப்பற்றி நன்கு அறிவான்; புரூட்டஸ் ஏமாந்துதான் இதனைச்செய்தான் என்று அன்ரனிக்குத் தெரியும். அன்ரனி தன் வாய்வீரத்தை, புரூட்டஸ்ஸின் ஏமாற்றத்தை அவனுக்கே எடுத்துக் காட்டுவதிற் செலவு செய்திருப்பானேயானால்,

எந்தக் கத்தி சீசரின் இருதயத்தைப் பிளந்ததோ, அந்தக் கத்தி கஷியஸ் கூட்டத்தைச் சங்காரஞ்செய்து, எந்தத் தலையோடு கூடிவாழ்ந்ததோ, அந்தத் தலையையும் அக்கினியில் இட்டு, வீரயாகம் செய்திருக்கும், புரூட்டஸ்ஸின் உதிர ஊற்று, சீசரின் இரத்தப் பெருக்கோடு ஒன்றுபட்டு, ரோமாபுரியை மாத்திரமன்றி, இந்த நில உலகத்தையே செம்மை செய்திருக்கும்.

புரூட்டஸ்ஸின் மரணம், பழிக்கஞ்சிய மரணமாய் விலைகொடுத்துப் பெறவேண்டிய வீரமரணமாய், வருங்கால உலகம் மனங்கசிந்து கண்ணீர் சொரிந்து அகமும் முகமும் ஒருங்கு கழுவிப் புனிதமாவதற்கு உபகாரப்பட்டிருக்கும்.

★ ★ ★ ★

அந்த அகழானான அன்ரனி அப்படிச்செய்யவில்லை. அந்த வஞ்சகன், பாமரசனங்களுக்கு உருப்போட்டான். அந்தப் பெல்லிப் பேய்கள், புரூட்டஸ்ஸைச் சுற்றி வளைந்து கொண்டன. அற்பர்களிடம் அகப்பட்டு அவமானப்படுதற்கு அஞ்சிப் புரூட்டஸ் தற்கொலை செய்கின்றான். பாவம்! அவனுக்கு ஒரு துளி கண்ணீர் விட ஆளில்லை. இப்படி மரணத்துக்கு ஆர்தான் கண்ணைக் கசக்க வருவார்கள்!

புரூட்டஸ் உலக அறிவுக் குறைவினாலே அநியாயமாக மரணிக்கின்றான். அவன்பால் வைத்த நீதி அவனுக்கு உபகரிக்கவில்லை. "பெரிய நன்மையும் ஆபத்தானது" என்று மேலைப்புலவர் ஒருவர் ஒரு சமயம் சொன்னதுபோல, "நீதி ஆபத்துக்குதவாது; லௌகிக தந்திரந்தான் ஆபத்சகாயன்" என்று சொல்ல வேண்டியும் வந்துவிட்டது.

★ ★ ★ ★

இந்தியாவிலே பிரிவினையின் பயனால் விளைந்த முகாரி ராகம் சுரோத்திரேந்தியங்களை எரித்து, உயிரைச் சாம்பர் செய்கின்றது. அந்த இராகத்துக்குக் கலையுலகம் சுரம் வகுத்து, அருமந்த இசைக்கலை பாழ்போகாமல் கண்ணுங்கருத்துமாய் அதனை வளர்க்க முனைகின்றது. கலை வாழ்க.



இலவச விநியோகத்திற்காக

இந்த முகாரிக்கலை போலவே அன்ரனியின் பேச்சுக்கலை. இங்கிலிஷ் இலக்கிய பண்டிதர்களின் மத்திலே, நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய், வளர்ந்து வருகின்றது. எத்தனையோ பக்தர்கள் அன்ரனியாதற்குத் தவம் கிடக்கிறார்கள். சேர்ச்சில் போன்றவர்கள் தவம் முதிர்ந்து அன்ரனியாய் விட்டார்கள்.

★ ★ ★ ★

சன்மார்க்கர்களான தாய், தந்தையர்கள், அன்ரனி போன்ற கபடிகளின் சாதுரியத்தைத் தங்கள் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லுவதில்லை. இது உளநூன் முடிபு. மகாத்மா போன்றவர்கள் என்ன சொல்லுவார்களென்று சிந்தித்துப் பார்க்கலாம்.

★ ★ ★ ★

உலகமாகிய குழந்தைக்கு அன்னையும் பிதாவுமாயிருக்கிறான் இலக்கியப் புலவன். அவனுக்குக் குழந்தைகள் மத்தியிலே பேசுங்கதை எது? பேசாக்கதை எது? என்று தெரியும். ஒரு தாய், தன் பிள்ளைக்கு வயிற்றில் பூச்சி வருமென்று அஞ்சி இனிப்பைக் கொடுக்க மறுக்கின்றாள்.

★ ★ ★ ★

அன்ரனி அப்படி சொன்னான். அப்படியே புலவருஞ் சொன்னார். நடந்ததை நடந்தபடி சொல்வதுதான் புலவன் வேலை என்பது மேலைத்தேசத் தலைவிதியானால், அவ்விஷயத்தில் அந்தப் புலவர் வெற்றிக்கு மேல் வெற்றியடைந்தே விட்டார். ஆட்ஷேபம் இல்லை.

பாமர சனங்கள் தமக்கென ஒன்று இன்றி வாசாலகர்களான வஞ்சகர்களின் வலையிற்பட்டு, அடித்த காற்றுக்கு அசைகிறவர்கள் என்பதைக் காட்டுகிறதுதான் அன்ரனி பேச்சுக்குப் பயன். ஆனால் ஐயையோ! களவின் மர்மத்தைத் தந்திரமாகக் களவு செய்து காட்டுவது போலத்தான் அதுமுடியும். பொய்யின் இயல்பைப் பொய் சொல்லிக் காட்டுவதா! அன்ரனி பேச்சுப் பாமரர்களை பெலஹீனமறிந்து ஏமாற்ற இடந்தருமா? அன்றி அவர்களியல்புக்கு இரங்க இடந்தருமா? எஞ்சிக் கிடக்கிற இரசம் எது? அன்ரனி பேச்சில் உலகம் என்ன நுகருகின்றது!

சேர்ச்சில் துரை இன்றைக்கு அன்ரனி பேச்சை எவ்வாறு உபயோகிக்கின்றார்!

★ ★ ★ ★

இனி சற்றே கிழக்கே திரும்புவோம்.

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

நீ நடந்ததை நடந்தபடி சொல்லு; ஒரு சிறிதும் தீயரசம் பிறக்கக் கூடாது. நீ இல்லாததைக் கூடச் சொல்லு; அது நல்லதாய் யாருக்குமினியதாய் இருக்க வேண்டும்.

★ ★ ★ ★



இலவச விநியோகத்திற்காக

பாண்டியன் நெடுஞ்செழியன் ஒருநாள் புரூட்டஸ் ஆக நேர்ந்தது. தட்டான் ஒருவன் ஏமாற்றினான், ஒரு பாவமும் அறியாத கோவலன் தலைஉருண்டது.

இந்த அநியாயத்தைக் கண்ட ஒரு அன்ரனி, பாமர சனங்களுக்கு உருப்போட அவர்களின் அற்பத்தனத்துக்கு அஞ்சி பாண்டியன் நெடுஞ்செழியன் தற்கொலை செய்து கொள்ளவில்லை. தான் ஏமாந்து செய்த பிழையைச் சரியென்று நினைத்துக் கொண்டு பாண்டியன் நெடுஞ்செழியன் சாகவில்லை. அப்படிச் சாக அந்த ராச கவிஞன் விடவில்லை; இல்லை! இல்லை! பாண்டியன் நீதி விடவில்லை.

★ ★ ★ ★

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் ஏமாற்றத்தை உணருகிறான். அவன் விஷயத்தில் 'உணருகிறான்' என்று சொல்வதே வெறுங் காலதாசம். உணருகின்ற - உணர்ச்சியிற் பட்ட - அந்தக்ஷணமே பாண்டியன் உயிரை நீத்தான்; பதிவிரதையாகிய அவன் பத்தினியும் உடன்சென்றாள்.

'தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்தாயினான்'

'வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது'

★ ★ ★ ★

புகழ்ச்சோழர் சேனைகள் எதிரிகளின் மேற் செல்லுகின்றன. எதிரிகள் தலைகள் உருளுகின்றன. ஒரு பாவமும் அறியாத ஒரு அடியாரின் தலையும் சேர்ந்து உருளுகின்றது. அதைக்கண்டதும் புகழ்ச் சோழர், அந்தத் தலையைத் தம் தலைமீதேந்தி, அக்கினியெழுப்புவித்து அதிற் குதிக்கிறார். அக்கினியெழுப்புவிக்கக் கூட நேரமின்றிப் பாண்டியன் நெடுஞ்செழியன் தேவர் கோன் தன் கோயில் நல்விருந்தாயினான்.

★ ★ ★ ★

பழிக்கஞ்சிய புகழ்ச்சோழர், நாயனார் வரிசையில் எண்ணப்படுகின்றார். அப்படியானால், பாண்டியன் நெடுஞ்செழியன்...?

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து

இலக்கியரசிகர்களே, வம்மின்கள்! சற்றே கண்ணீர் விடுவோம். புரூட்டல் மரணத்துக்கு அல்ல; பாண்டியன் நெடுஞ்செழியன் பிரிவுக்கு, உள்ளப் பிரிவுக்கு, ஆபத் சகாய நீதியின் நீளத்துக்கு,

*பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை*
*சிந்தனைக் களஞ்சியம்*



இலவச விநியோகத்திற்காக